உ

ஓம் குஹாயநம :

திருப்புகழமிர்தம்.

(All Rights Reserved)

" குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றன்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம் "

மலர் 2 Vol. 2 | ஈஸ்வர ஹூ மாசி மீ 1உ பிப்ரவரி—1938 | இதழ் 11. No. 11.

திருப்புகழ்.

திருச்செந்தூர்.

உருக்கம் பேசிய நீலியர் காசுகள்
பறிக்கும் தோஷிகள் மோகவி காரிகள்
உருட்டும் பார்வையர் மாபழி காரிகள் மதியாதே
உரைக்கும் பீரிகள் கோளர வாமென
உடற்றுந் தாதியா காசள வேமனம்
உறைக்குந் தூரிகள் மீதினி லாசைகள் புரிவேனோ
அருக்கன் போலொளி வீசிய மாமுடி
யனைத்துந் தானழ காய்நல மேதர
அருட்கண் பாவையி னுலடி யாதமை மகிழ்வோடே
அழைத்துஞ் சேதிகள் பேசிய காரண
வடிப்பந் தானென வேயெனை நாடோறும்
அதிக்கஞ் சேர்தர வேயரு ளாலுட னினிதாளாய்
இருக்குங் காரண மீறிய வேதமும்
இசைக்குஞ் சாரமு மேதொழு தேவர்கள்
இடுக்கண் தீர்கன னேயடி யாதவ முடன்மேவி
இலக்கந் தானென வேதொழ வேமகிழ்
விருப்பங் கூர்தரு மாதியு மாயுல
கிறுக்குந் தாதகி சூடிய வேணிய னருள்பாலா

திருக்குந் தாபதா வேதிய ராதியர்
துதிக்குந் தாளுடை நாயக னாகிய
செகச்செஞ் சோதியு மாகிய மாதவன் மருகோனே
செழிக்குஞ் சாலியு மேகம ளாவிய
கருப்பஞ் சோலையும் வாழையு மேதிகழ்
திருச்செந் தூர்தனில் மேவிய தேவர்கள் பெருமாளே.

பதவுரை.

இருக்கும் - இருக்குவேதமும், காரணம் மீறிய வேதமும் - காரணங்களைக் கடந்து நிற்கும் (தனிப் பெருஞ்சிறப்புடைய) தமிழ் வேதமும், இசைக்கும் சாரமும் - அவ்வேதங்களில் மறைந்துள்ள உட்கருத்துக்களைத் தெளிவாக விளக்கிக்கூறும வேதசாரமாகிய ஆகமங்களும், (ஏ - பிரிநிலை) தொழ - தொழுது வழிபட நின்றவரும், தேவர்கள் இடுக்கண் தீர் - தேவர்களுடைய துன்பத்தைத் தீர்த்தருளியவருமாகிய, கனனே - கன்னியமுள்ளவரே!, தவமுடன் மேவி - தவவொழுக்கத்துடன் வந்து, இலக்கத்தான் என - இலட்சக்கணக்கான, (ஏ - அசை) அடியார் தொழ - அடியார்கள் தொழுது வழிபட, மகிழ் விருப்பம் கூர்தரு - மகிழ்ந்து அவ்வடியார்கள்மீது அன்புகொள்ளும், ஆதியுமாய் - முன்னைப்பழம்பொருட்கும் முன்னைப்பழம்பொருளுமாய், உலகு இறுக்கும் - உலகங்களை எல்லாம் (சர்வசங்காரகாலத்தில்) சங்கரிக்கும் தனிப்பெருந்தலைவராய், தாதகி சூடிய வேணியர் - ஆத்திமலரையணிந்துகொண்டுள்ள சடைமுடியுடையவராய் எழுந்தருளியுள்ள சிவபெருமான், அருள்பாலா - அருளிய திருக்குமாரரே! திருக்கும் தாபதர் - அறிவுக்கண்ணுடன் விளங்கும முனிவர்களும், வேதியர் ஆதியர் - வேதங்களையுணர்ந்த அந்தணர் முதலியோர்களும், துதிக்கும் தாளுடை நாயகன் ஆகிய - தோத்திரம் புரியும் திருவடிகளையுடைய தேவர்களுக்குத் தலைவரும், செகச் செஞ்சோதியும் ஆகிய மாதவன் - செவ்விய செகச்சோதியாய் விளங்குபவருமாகிய திருமாலினது, மருகோனே - மருகரே! செழிக்கும் சாலியும் - செழிப்புடன் வளர்ந்துள்ள நெற்பயிரும், மேகம் அளாவிய கருப்பஞ் சோலையும் - மேக மண்டலத்தை அளாவிவளர்ந்துள்ள கருப்பஞ்சோலையும், வாழையும் - வாழைமரங்களும், (ஏ - அசை) திகழ் - எங்கும் விளங்கப்பெற்றுள்ள, திருச்செந்தூர்தனில் மேவிய - திருச்செந்தூர் எனும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள, தேவர்கள் பெருமாளே - தேவர்களுக்குத் தேவ

ராக விளங்குபவரே! உருக்கப் பேசிய நீலியர் - மனம் உருகும்படி நயமாகப் பேசுகின்ற கொடியவரும், காசுகள் பறிக்கும் தோஷிகள் - பணத்தைப் பிடுங்கும் பாவிகளும், மோகவிகாரிகள் - மோகத்தால் மனோவிகாரமுள்ளவர்களும், உருட்டும் பார்வையர் - சமயத்திற்குத் தக்கபடி கீழும் மேலும் பக்கமுமாகக் கண்களை உருட்டிப்பார்க்கும் தன்மையுடையவர்களும் மாபழிகாரிகள்-பெரிய பழிகளைக்கூறுபவர்களும், மதியாதே உரைக்கு பீரிகள் - ஒருவரையும் மதியாமற்படி அலறிச்சத்தமிட்டுப் பேசுகின்றவர்களும், கோள ஆரவார என-விடத்தையுடைய பாம்பைப்போல உடற்றும் காதியர் - வருத்துகின்ற காதிகளும், காசு அளவே மனம் உறைக்கும் தூரிகள் மீதினில - அவரவர்கள் தரும் பணத்திற்குத்தக்க அளவிலேயே மனத்தை வைக்கும் துன்மார்க்கருமாகிய விலைமகளிர்மேல், ஆசைகள் புரிவேனோ - இனி அன்பு கொள்வேனோ? (கொள்ளேன்) அருக்கன்போல் - சூரிய பகவானைப் போல், ஒளிவீசிய - பிரகாசிக்கின்ற, மாமுடி அனைத்தும் தான் - பெருமைமிக்க இரத்தின கிரீடங்கள் யாவும், அழகாய் நலமே தர - காண்பவர்களுக்கு அழகாக விளங்கி நன்மையையே வழங்க, அருள்கண் பார்வையினால - கருணை பொழியும் திருக்கண்பார்வையால், அடியார்தமை மகிழ்வோடே அழைத்தும் - அடியார்தமை மகிழ்ச்சியுடன் வலிய அழைத்தும், சேதிகள் பேசிய காரண - ஞானச் செய்திகளைப் பேசுகின்ற காரணப்பொருளே!, வடிப்பம் தான் என (ஏ-அசை) செப்பம் என்று சொல்லும்படி, நாள்தொறும் அதிக்கம் சேர்தர - (அடியேன்) மென்மேலும் மேன்மையடையும் வண்ணம், அருளால் உடன் - தமது திருவருளால் இக்கணத்திலேயே, எனை இனிது ஆள்வாய - அடியேனை இனிது ஆட்கொண்டருள்வீர்.

பொழிப்புரை.

இருக்கு வேதமும் காரணங்களைக் கடந்துநிற்கும் பெருஞ் சிறப்புடைய தமிழ் வேதமும், அவ்வேதங்களில் மயங்கக்கூறிய உண்மைப் பொருள்களைத் தெளிவுறக் கூறும் வேதசாரமாகிய ஆகமங்களும் தொழுது வழிபாடுசெய்ய நின்றவரும், தேவர்களது துன்பத்தை நீக்கி யருள்பவருமாகிய கண்ணியமுள்ளவரே! தவ வொழுக்கத்துடனடைந்த இலட்சக்கணக்கான அடியார்கள் வணங்க மகிழ்ந்து, அவர்கள்மீது அன்பு கொள்ளும் ஆதி பராபரவஸ்துவாக விளங்குபவ

ரும், சர்வ சங்காரகாலத்தில் உலகத்தைச் சங்கரிப்பவரும், ஆத்தி மலரைச் சூடிய சடாமுடியை யுடையவருமாகிய சிவபெருமானருளிய திருக்குமாரரே!, அறிவுக்கலைகள் விளங்கப்பெற்ற முனிவர்களும் வேதியர் முதலியவரும் துதிக்கும் திருவடிக்கமலங்களையுடைய தேவ சிரேட்டரும், செகசசெஞ் சோதியுமாகிய நாராயணரது மருகரே! செழிப்புடன் வளர்ந்துள்ள செந்நெற்பயிரும் மேகமண்டலம்வரை வளம்பெற ஓங்கிய கருப்பஞ்சோலையும் வாழையும் நெருங்கி விளங்கிக்கொண்டிருக்கும் திருச்செந்தூர் என்னும் திவ்ய க்ஷேத்திரத்தில் எழுந்தருளிய தேவர்களுக்குத் தேவரே! உருக்கமாகப்பேசி மனத்தைக் கவரும் நீலிகளும், பணத்தைப் பறிக்கும் தோஷிகளும், மோகத்தால் விகாரத்தன்மையுற்றவர்களும், மேலும் கீழும் பக்கமுமாக விழிகளை உருட்டிப்பார்க்கும் பார்வையுடையவர்களும், பெரிய பழியைச் சுமத்தும் பழிகாரிகளும், ஒருவரையும் மதியாமற்படி வேகமாகப் பேசுபவர்களும், நச்சுப்பற்களையுடைய அரவத்தைப்போல் பிறரைத் துன்புறுத்தும் தாசிகளும், அவரவர்கள் தரும் பணத்தின் அளவாகவே மனத்தைச் செலுத்தும் துன்மார்க்கிகளுமாகிய பொருட்பெண்டிர்மீது அடியேன் இனி ஆசைவைப்பேனோ? (ஒருபோதும் வையேன்) சூரியனைப்போல் ஒளிவீசுகின்ற பெருமைமிக்க மணிமகுடங்கள் அனைத்துமே அழகாகப் பார்ப்பவர்களுக்கு நன்மையே வழங்க, திருவருள்பொழியும் திருக்கண்பார்வையால் அடியார்களைச் சந்தோஷத்துடன் வலிய அழைத்தும் ஞான வுரைகளைப் பேசுகின்ற காரணவஸ்துவே! நடுநிலைமை என்று சொல்லும்படி அடியேனை தினந்தோறும் மென்மேலும் மேன்மையை அடையுமாறு தமது திருவருளால் உடனே அடியேனை இனிது ஆட்கொண்டருள்வீர்.

விரிவுரை.

அருக்கன்போல் . . . . . நலமேதர :—

முருகப்பெருமானுடைய ஆறு திருமுகங்களிலுமுள்ள எல்லா மணிமகுடங்களும் மிக்க ஒளியுடன் ஆறு இளங்கதிர்களைப்போல் பிரகாசித்துக்கொண்டு தெரிசிப்போர்களுக்கு நலன்களையே வழங்கிக்கொண்டிருக்கின்றன.

அருட்கண்பார்வை :—

குமாரக்கடவுளது பன்னிரண்டு விழிகளிலும் கடலைப்போல் அருள்வெள்ளம் வழிந்துகொண்டேயிருக்கிறது.

" மறுவறு கடலென மருவுப னிருவிழி
வழிந்த அருளே பொழிந்த தொருபால் " — வகுப்பு.

" துங்கரிள் பன்னிரு கருணை விழிமலரும் "
— திருப்புகழ்.

அக் கருணைபொழுகுங் கடைக்கண்பார்வை ஒருமுறை நமது மேல் சற்றுபட்டவுடனே மும்மலங்களும் வெந்து நீறாகிவிடுகின்றன; மெய்ஞ்ஞானம் மிளிர்கின்றது; அப் பார்வையின் பெருமைதான் என்னே! என்னே! அதனைப்பெற்ற பரம குருமூர்த்தியாகிய அருணகிரியடிகளின் பாக்கியந்தான் என்னே!

" ஆணவ அழுக்கடையும் ஆவியை விளக்கியநு
பூதியடை வித்ததொரு பார்வைக்காரனும் "
— வகுப்பு.

" கனகத்தினு நோக்கினி தாயடி
யவர்முத்தமி ழாற்புக வேபர
கதிபெற்றிட நோக்கிய பார்வையு மறவேனே "
— திருப்புகழ்.

கந்தப்பெருமானுடைய அக் கடைக்கண் அருட்பார்வையால் இவை இவையுண்டாகுமென ஆசிரியர் பிறிதோரிடத்தில் கூறுமாறுங் கண்டு மகிழ்க.

" அலைகடல் வளைந்துடுத்த எழுபுவி புரந்திருக்கும்
அரசென நிரந் தரிக்க வாழலாம்
அளகையர சன்றனக்கும் அமரர சன்றனக்கும்
அரசென அறஞ்செலுத்தி யாளலாம்
அடைபெறுவ தென்றுமுத்தி அதிமதுர செந்தமிழ்க்கும்
அருள்பெற நினைந்த சித்தி யாகலாம்
அதிரவரு மெமனுமுட்ட அலகில்வினை சண்டைநிற்க
அடலெதிர் புரிந்து வெற்றி யாகலாம்
இலகியந லஞ்செய்புட்ப கமுமுடனிறம் வெளுத்த
இபவர செனும் பொருப்பு மேறலாம்
இருவரவா நின்றிடத்து மேவரெவ ரிருந்திடத்தும்
ஒருவனிவ னென்றுணாச்சி கூடலாம்
எமபடர்தொ டாந்தழைக்கில் அவருட னெதிர்ந்துளுட்க
இடியென முழங்கி வெற்றி பேசலாம்
. . . . ,
பாருளீர் . . . வேலினுன். . . கடைக்கணியலையும்
நினைந் திருக்க வாருமே "

அடியார்தமை மகிழ்வோடே அழைத்தும் :—

கருணைக் கடவுளாதலால் கந்தப்பெருமான் அடியார்களை மகிழ்ந்து வலிய அழைத்து நல்லுரைகளைஉபதேசித்து அருள்புரிகிறார்.

"அடியவ ரிச்சையில் எவையெவை யுற்றன
அவைதரு வித்தருள் பெருமாளே"
—திருப்புகழ்.

காரண :—

உலகங்களுக்கும், சிருட்டியாதி யைந்தொழில்களுக்கும், பிற வற்றிற்கும் காரணமாய் நின்ற முழுமுதற் கடவுள் முருகப்பெருமானேயாவர். இதனை, அப்பெருமானது திருவருட்டுணை கொண்டு ஞானவிழியால் நோக்கிய சூரபன்மன் வாயார வாழ்த்தி வழுத்தது தலைக்கண்டு தெளிக.

கோலமா மஞ்ஞை தன்னில் குலவிய குமரன் றன்னைப்
பாலனென் றிருந்தே னந்நாட் பரிசிவை யுணர்ந்தி லேன்யான்
மாலயன் றனக்கு மேனை வானவர் தமக்கும் யார்க்கு
மூலகா ரணமாய் நின்ற மூர்த்தியிம் மூர்த்தி யன்றோ.

இருக்குந் . . . . தொழு .—

குகமூர்த்தி வேதாகமங்களால் தொழப்பட்டவர் என்பதை
"ஆலமுண்ட கோனகண்ட லோகமுண்ட மால்விரிஞ்சன்
ஆரணங்கள் ஆகமங்கள் புகழ்தாளும்" —திருப்புகழ்.

தேவர்கள் இடுக்கண் தீர்க்கனனே :—

சூராதியவுணர்களால் நூற்றெட்டுயுகங்களாக தேவர்கள் துன்புற்று இனி இன்புறுங்காலமும் எய்துமோ? என்று ஏங்கி இளம் பூரணனாகிய எம்பெருமானிடம் தமதுகுறைகளை முறையிட, அறுமுகக் கடவுள் போந்து அவுணர்களது மறச் செயலையழித்து அறநெறியை வளர்த்து அமரர்கள் அல்லலை நீக்கி என்றுமழியா இன்பத்தை வழங்கினர்.

"அடியவர் வினையும் அமரர்கள் துயரும்
அறஅருளுதவு பெருமாளே.
"வானுடரசாளும்படிக்கு வாவா வெனவா வெனறழைத்து
வானோ பரிதாபந் தவிர்த்த பெருமாளே"

கருத்துரை.

வேதாகமங்களால் தொழப்பட்டவரே! தேவர்துயர்தீர்த்த கனம் பொருந்தியவரே! ஆதிபராபரமுதல்வரும் சர்வசங்காரகர்த்தரும ஆத்திமலரணிந்த வேணியருமாகிய சிவகுமாரரே! முனிவர் மறையோர் முதலியோர் துதிக்கும் செகச்சோதியாகிய திருமகள் கொழுநர் மருகரே! திருச்செந்திலாதிப! தேவதேவரே! பொருள் பறிக்கும் இருமனப் பெண்டிராகிய விலைமகளிர்மீது அன்புகொள்வேனோ? கொள்ளேன்); மென்மேலும் நன்மையடையுமாறு அடியேனை உடனே யாட்கொள்வீர்.'

உ

ஓம் ஸுப்ரஹ்மண்யாய நம:

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்க ஸ்தோத்திரம்.

(ஆதிசங்கரர் அருளிச் செய்தது)

(300-ம் பக்கத் தொடர்ச்சி.)

जनित्री पिता च स्वपुत्रापराधम्
सहे तेन किं देव सेनाधिनाथ ।
अहं चाति बालो भवान् लोकतातः
क्षमस्वाप राधं समस्तं महेश ॥

(30) ஜனித்ரீ பிதாச ஸ்வபுத்ராப ராத3ம்
ஸஹேதே நகிம் ? தே3வ ஸேனாதி4 நாத2 ।
அஹஞ் சாதி பா3லோ ப4வான் லோகதாத:
க்ஷமஸ்வாபராத4ம் ஸமஸ்தம் மஹேச ॥

பதவுரை.

ஹே தேவ ஸேனாதி நாத ! மஹேச ! - ஓ தேவர்களுக்குச் சேனாபதியாகிய மஹேசுவரனே !
ஜனீத்ரீ பிதாச ஸ்வபுத்ராபராதம் - தாயும் தந்தையும் பிள்ளையின் குற்றத்தை
நஸஹேதே கிம் ? - பொறுக்கின்றார்களா ? இல்லையா ?
அஹம் ச அதிபால: - நானோ சிறுகுழந்தை,
பவான் லோக தாத: - தேவரீரோ உலகத்திற்குத் தந்தை,
அத: அபராதம் ஸமஸ்தம் க்ஷமஸ்வ - ஆகையினால் குற்றம் யாவும் பொறுத்தருளல் வேண்டும்.

பொழிப்புரை.

ஓ தேவ ஸேனாதிபதியாகிய பரமேசுவரரே ! தாய் தந்தைகள் பிள்ளைகளின் பிழைகளைப் பொறுப்பது இயற்கையாதலால் உலகத்திற்கெல்லாம் தந்தையாகிய தேவரீர் சிறுவனாகிய அடியேனுடைய பிழைகளைப் பொறுத்துக் காப்பாற்றக் கடமைப்பட்டிருக்கிறீர்.

இதனால் முருகக்கடவுளே உலகத்திற்கு முதற்காரணமெனத் தெளிவாகக் கூறப்பட்டது.

नमः केकिने शक्तये चापि तुभ्यम्
नमस्त्वाग तुभ्यं नमः कुक्कुटाय ।
नमःसिन्धवे सिन्धुदेशाय तुभ्यम्
पुनःस्कन्दमूर्ते नमस्ते नमोऽस्तु ॥

(31) நம: கேகினே சக்தயே சாபி துப்யம்
நமஸ் சாக! துப்யம் நம: குக்குடாய।
நம: ஸிந்தவே ஸிந்துதேசாய துப்யம்
புன: ஸ்கந்தமூர்த்தே! நமஸ்தே நமோஸ்து ॥

பதவுரை.

கேகினே நம: சாக துப்யம் நம: - சுவாமியின் வாகனங்களாகிய மயிலுக்கும் ஆட்டிற்கும் நமஸ்காரம்,
சக்தயே சாபி துப்யம் - வேலாயுதத்திற்கும் நமஸ்காரம்.
குக்குடாய நம: - கொடியாகிய கோழிக்கும் நமஸ்காரம்,
ஸிந்தவே நம: - சமுத்திரத்திற்கும் நமஸ்காரம்,
ஸிந்துதேசாய துப்யம் நம: - சுவாமி வாசம்பண்ணும் சமுத்திரக்கரைக்கும் நமஸ்காரம்,
ஹே ஸ்கந்தமூர்த்தே - ஓ ஸ்கந்தமூர்த்தியே,
தே புன: நம: அஸ்து நம: அஸ்து - தேவரீருக்கும் மீண்டும்மீண்டும் நமஸ்காரம்,

பொழிப்புரை.

முருகக்கடவுளின் வாகனங்களாகிய மயிலையும் ஆட்டினையும் வேலையும் கொடியாகிய கோழியையும், எதிரில் விளங்கும் சமுத்திரத்தையும், சுவாமியின் வாசஸ்தலமாகிய சமுத்திரக்கரையையும், சுவாமியையும் மீண்டும் மீண்டும் நமஸ்கரிக்கின்றேன்.

இதனால் முருகக்கடவுளே அடுத்தவர்களும் அனைவர்களாலும் வணங்குதற்குரியவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(தொடரும்).

உ

ஓம் கந்தாய நம:

கந்தர் திருவிளையாடல்

(300-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

முருகக்கடவுள் விசுவரூபம்.

இந்திரன் முதலிய இமையவர்கள் இவ்வாறு விண்ணப்பம்புரிய எந்தை கந்தவேள் அது கேட்டு, "நம்மை நீங்கள் ஒரு பாலன் என்று நினைந்து பொருதீர்கள், நமது வன்மையையும் பெருமையையும், இன்னும் நீங்கள் உணரும்வண்ணம் காட்டுவேம்" என்று திருவாய்மலர்ந்து எட்டுத்திக்குகளும், பதினாறு உலகங்களும், எட்டு மலைகளும், ஏழு கடல்களும், புறக்கடலும், சக்கரவாளகிரியும், வெவ்வேறண்ட நிரைகளும், சருவான்மாக்களும், பிரமவிட்டுணு உருத்திரர்களும் அடங்கிய பரமேசுர ரூபத்தைக்கொண்டருளினார்.

எண்டிசையு மீரேழு திறத்துலகு மெண்கிரியு மேழு கடலுந்
தெண்டிரையு நேமிவரை யுட்பிறவும் வேறுதிரி பாகியுள சீர்
அண்டநிரை யானவு மனைத்துயிரு மெப்பொருளு மாகி யயனும்
விண்டுமா னுந்தெறிய வோருருவு கொண்டனன் விறற் குமரனே.

ஏழு பாதாள லோகங்கள் திருவடியிலும், ஏழு தீவுகளின் புடவி கணைக்காலிலும், ஏழுகடல்கள் உடுத்த உடையிலும், திசைகள் புயங்களிலும், ஆகாயம் நாபியிலும், தியுவென்னும் சுவர்க்கஞ் சென்னியிலும், சந்திரன் சூரியன் அக்கினி என்பன அழகிய மூன்று கண்களிலும், மேலாய மேகங்கள் கேசங்களிலும், விண்மீன்கள் அக்கேசாலங்கிருத மலர்நிலைகளிலும், சிவபரம்பொருள் ஆன்மாவிலும் (சிவசத்தியாகிய) கௌரி மதியிலும், (விட்டுணுவாகிய) சனார்த்தனர் இடப்பாரிசத்திலும், பகவானாகிய பிரமதேவன் வலப்பாரிசத்திலும், பாரதி வேதவாக்கிலும், இலக்குமி திருநிலையிலும், பிராணன்முதலிய பத்து வாயுக்களும் வாயுநிலையிலும், காலாக்கினி ருத்திரன சீற்ற நிலையிலும், அக்கினிதேவன் சாடராக்கினியிலும், அனந்தாதி மாநாகங்கள் நூபுரம் முதலிய காலணிகளிலும், ஓடதியனைத்தும் உரோமங்களிலும், அண்டகோடிகளெல்லாம் அவ்வுரோமங்களின் மேய பேன்

முட்டை நிலையினூடாகக் காணப்பட்டுச் சுடர்கோடி பகற்கதிரெனக் குளிர் கோடி இராக்கதிரென, மின்கோடி காலாக்கினியெனப் பிரகாசியா நின்ற தனது பரமாற்புத வுருவுள்ளான அப்பரமேசுவர வடிவினை அளப்பறு மகிமையுடைய அநாதராகிய சுப்பிரமண்ணியமூர்த்தி காட்டியருளினார். அவ்வடிவினொளியினால் தரிசித்த தேவர்களது விழிகள் (கணப்போது) பார்வையின்றி மாழ்கின. சூரர்களாகிய பிரமவிட்டுணுக்கள் முதலிய தேவசிரேட்டர்களைவரும் கந்தக்கடவுளது அளவிலாத் தேஜோ மண்டபத்தில் ஆயிரத்தில ஓரமிச அளவேயறிந்தனர். (அதிகமறிய வலியிலராயினர்).

ஸப்த பாதாள பாதந்தந் ஸப்தத்வீ போர்விஜங்ககம் !
ஸப்தார்ணவ பரீதாந்தம் ரீக்ஷபாஹும் வ்யோம நாபிதம் !!
த்யுசிரச் சந்த்ர ஸூர்யாக்ஷிம் நபந்த்ராய ப்ரசலம் !
பாத்ஜல தகேசந்தந் தாராதஸ்ம தும்பிதம் !!
சிவச்சாத்ம மதீர்கௌரி வாமபார்ச்வம் ஜநார்த்தந: !
தக்ஷிணம் பகவாந்ப்ரஹ்மா பாரதீ வைஜிஹ்வசவாத் !!
லக்ஷ்மீர் லக்ஷ்மீச்சபவன ப்ராணுதி தாபேதபாத் !
மந்யு காலாக்நி ரத்ரோக்நிர் ஜாடராஸ் ஸுதாஹ்ருத !!
அநந்தாதி மஹாநாகா பாதநபுர ஹ்ம்சபா. !
ரோமாண்யோஷத யோபூரி யூகாண்டாந்யண்டகோடய. !!
தத்கோடி ஸூர்யஸங்காசம் கோடிசந்த்ராம்சுசீதளம் !
கோடி காலாக்நி தேஜஸ்கம் பயம்நயமத்புதம் !!
அநிர்சயதமேயாத்மா ப்ரஹ்மண்யோ ஹ்யாஸம்பவ !
தேஜஸாதஸ்ய தேவாநாம் சக்ஷூம்ஷ்யபந்தீ க்ருதாந்யஹோ !!
ததஸ்தே விபுதேந்த்ராத்யா ப்ரஹ்ம விஷ்ண்வாதயஸ்ஸுரா: !
தந்தேஜோ மண்டலஸ்யைதே ஸஹஸ்ராம்சம லோசயந் !!

இவ்வாறு ஆயிரத்தில் ஓரமிசத்தை அவனருளாற் காணுந திவ்விய விழிகளைப்பெற்ற விட்டுணுமுதலிய தேவர்கள் முழந்தாள்வரையிலுமுள்ள உரோமங்கள் ஓரோவொன்றிலும் ஆயிரக்கணக்கான பலகோடி பேன்முட்டைகள அடுக்கடுக்காயச் செறிவுற்றிருத்தலையும் பிரமாண்டகோடிகளாம், அம்முட்டைகளுள் உலகங்களையும், அவையவற்றுள் அதனையதனைச்சார்ந்த இறப்பு நிகழ்வு வரவு எனனுங் காலங்கட்குரிய பலபுவனங்களையும், மன்பதையினையும், பிரமவிட்டுணுக்கள் முதலிய தேவர்களையும, அவ்வவ்வாவரணங்களையும் கண்ணுற்று, “ஆ! ஆ!! இவை யென்னே ? இஃதெனனே ?” என இறும்பூதுற்றுப் பெரிதும் அஞ்சிநின்று, வேதவாக்கியங்களால் எண்

ணிலாத தோத்திரங்களைச் செய்து வணங்கி, " ஞானானந்தவடிவாகிய முழுமுதற்கடவுளே! அடியேங்கள் முன் நீர் கொண்டருளிய விசுவ ரூபத்தை முற்றும் தரிசித்திலேம், அடியேங்கள் முற்றுந் தரிசிக்கும் வண்ணம் காட்டியருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். பெருங்கருணைக்கடலாகிய குமாரக்கடவுள் திருவுளமிரங்கித் தேவர்களுக்குத் திவ்விய நேத்திரத்தைக்கொடுத்து, அநந்தகோடி சூரியர்கள் திரண்டாற்போலப் பேரொளியை வீசிநின்ற தமது பரமேசுர ரூபத்தைக் காட்டியருளினார். தேவர்கள் ஆறுமுகக்கடவுளுடைய திருவுருவமுற்றையும் அடிமுதல் முடிவரையும் அவரது திருவருளினாலே தரிசித்து ஆனந்த பரவசர்களாய் வணங்கி நின்று, "எம்பெருமானே! பிருதிவியண்டமுதலிய அண்டங்களும், அவைகளுக்குள்ள தேவர்களும், உயிர்ப்பொருள்களும் உயிரில் பொருள்களும், பிரமா விட்டுணு உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளும், உமது திருமேனியில் இருப்பக்கண்டேம். உமது திருமேனியா அகிலமும் இருப்பது? விசுவமெல்லாம் நீரேயாய் இருக்கும் உண்மையை அடியேங்கள் இந்நாள்காறும் அறிந்திலேம், தேவரீரே வந்து அறிவித்தமையால் இப்பொழுது அறிந்தேம், உமது திருமேனியே யன்றிப் பிறிதொரு பொருளையும் காணேம். உமது திருவடிவத்தைச் சிறியேங்கள் காண வல்லமா? ஒரு பிரமன் இறந்தபோது விட்டுணு பேருருவங்கொண்டு திருப்பாற்கடலிலே துயில்செய்யும் அகாலத்தை ஒழிக்கும்வண்ணம் சிவபெருமான் அண்டங்களெல்லாம் ஆபரணங்களாக ஒரு திருமேனி கொண்டருளினார் என்னும் தன்மையை உமது திருமேனியிற் கண்டேம். எம்பெருமானே! உமது திருவுருவம் பிரமாவும் திருமாலும் பலகாலமுந்தேட, அவர்களுக்குத் தோன்றாது அக்கினி வடிவாய் நின்ற சிவபெருமானது திருவுருவமேபோலும். எம் பரமபிதாவே! இதனை யாவரும் அறிகிலர். எங்களைப்போல உமது திருவருளைப் பெற்று அடியையும் முடியையும் தெரிந்தவர் யாவர்? திருமாலும் திசைமுகனும் உலகத்தோடும் ஒருவரை யொருவர் விழுங்கி உந்தியாலும் முகத்தாலும் தோற்றுவித்து இருவரும் மாறுபடும்பொழுது எடுத்த பேருருவங்கள், நீர் கொண்டருளிய திருவுருவத்துக்கு மிகச் சிறியனவேயாம். ஆதலால், எம்பிரானே! நீர் அருவமும் உருவமுமாய் நின்ற ஏகநாயகரேயாம். அடியேங்கள் செய்த தவத்தினாலே சூராதியவுணர்களைக்கொன்று அடியேங்களுடைய துன்பத்தை நீக்கும்பொருட்டுப் பாலராய் திருவவதாரஞ் செய்தருளினீர். எவ்வுரு

வங்களுக்கும் ஓரிடமாயுள்ள உமது திருவுருவத்தைத் தரிசித்துச் சிறப்படைந்தேம். இருவினைப்பயன்களை நுகர்தற்கெடுத்த சரீரத் துன்பம் நீங்கிவிட்டேம். இனி நாங்கள் பிறவித்துன்பமடையாது நிரதிசய முத்தியின்பத்தை அடைவேம்" என்று விண்ணப்பஞ்செய்தார்கள். பிறகு, முருகக்கடவுளுடைய விசுவரூபத்தை நோக்கி மனம் மிக வெருவச் சரீரம் அலமாமயங்கி, 'எம்பெருமானே! உமது திருவுருவம் அளப்பில்லாத ஒளியையுடையது; இனிப் பார்க்கும் ஆற்றலில்லை; கண்கள் ஒளி யிழந்தன; அன்றியும் இதன் பெருமையை நோக்கி அஞ்சுகிறேம். அடியேங்கள் உய்யும் வண்ணம் முன்னைத்திருவுருவங்கொண்டு எளியேங்களை ஆண்டருள்வீர்" என்று வேண்டினார்கள்.

குமாரக்கடவுள் தமது விசுவரூபத்தை ஒழித்து, ஆறுதிருமுகங்களோடும் முன்னைவடிவங்கொண்டு நிற்க, இந்திரன் வணங்கித் துதித்து, பெருங் கருணாநிதியே! சூரன் முதலிய அசுரர்களைக் கொன்று, அடியேனும் தேவர்களும் தொண்டுசெய்யச் சுவர்க்கத்தைத் தேவரீர் அரசுசெய்துகொண்டிருத்தல்வேண்டும்" என்று பிரார்த்தித்தான். தம்மை வழிபடும் அடியார்களுக்கு அவரவர் வேண்டியவாறே இம்மை மறுமை வீடுகளைக்கொடுத்தருளும் பெருங்கருணைக்கடலாகிய அறுமுகக்கடவுளுக்கு, இந்திரன் தன்னரசைக் கொடுப்பதாகச்சொல்லிய வாசகம் அக்கினிதேவனுக்கு ஒரு தீபம் கொடுக்க எண்ணியதைப்போலும். கந்தப்பெருமான் இந்திரனை நோக்கி நகைத்து, "நீ நமக்குத்தந்த அரசை நாம் உனக்குத்தந்தேம்; நீங்கள் சேனைகளாக நாமே சேனாதிபதியாகி அசுரர்கள் எல்லோரையும் கொல்வேம், வருந்தாதொழி" என்று அருளிச்செய்தார் இந்திரன் அதுகேட்டுத் தேவர்களோடும் மகிழ்ச்சியுற்று, முருகக்கடவுளை நோக்கி, "எந்தையே! இவ்வண்டத்துள்ள மலைகள், கடல்கள், உலகங்கள், உயிர்கள் முதலியனவெல்லாம் இந்நாளில் உம்மாலே முறைபிறழ்ந்தன அவைகளையெல்லாம் முன்புபோல நிறுவியருளும்" என்று வேண்டினான். எம்பெருமான் இளநகைபுரிந்து, "இவ்வண்டத்தில் நம்மாலே முறைபிறழ்ந்தன எல்லாம் பண்டைய நிலையை அடையக்கடவன" என்று திருவாய்மலர்ந்தருள, அவையெல்லாம் உடனே முன்னை நிலைமை அடைந்தன. அனைவரும் அதுகண்டு அற்புதமடைந்து நின்றார்கள்.

அப்பொழுது இந்திரன் கந்தவேளை வணங்கி "மூவர் தேவாதிகள் தம்பிரானே! வேதமுடியிலே விளங்காநின்ற உம்முடைய திருவடிகளைப் பூசிக்க விரும்புகின்றேம். அது செய்யுமவண்ணம் திருவருள் புரிக" என்று வேண்டினான். முருகக்கடவுள் அதற்கிசைந்து, தேவர்கள் பின்றொடர நடந்து, மகாமேருமலையை நீங்கி, திருக்கயிலைமலைக்கு அணித்தாயுள்ள ஒரு மலையை அடைந்தார். அப்பொழுது தேவதச்சனை நினைக்க, அவன் இந்திரன் முன்வந்து கைதொழுது நிற்க, இந்திரன் அவனை நோக்கி, "நீ இங்கே ஒரு திருக்கோயில் செய்யக்கடவாய்" என்றான். தேவதச்சன் அங்கே நவமணிகள் பதித்த ஒரு செம்பொன்னாலயமும், அதனுள்ளே ஒரு திவ்விய சிங்காசனமுஞ்செய்தான். தேவர்கள் பலர் இந்திரனுடைய ஏவலினாலே திருமஞ்சனம், சந்தனம், நறுமலர், தூபம், தீபம், நிவேதனப் பொருள்கள் முதலிய பூசோபகரணங்களையெல்லாம் கொண்டுவந்தார்கள். அப்பொழுது இந்திரன் கந்தப்பெருமானை வணங்கி, "சுவாமி! தேவரீருடைய திருவடித்தாமரைகளை அடியேங்கள் பூசித்து உய்யும்பொருட்டு இப்பொன்னெடுங்கோயிலுக்குள் எழுந்தருள்க" என்று பிரார்த்தித்தான். வேதப்பொருளாகிய முருகப்பெருமான் அது கேட்டு, அமரர்களை அனைவருந் துதிப்பத் திருக்கோயிலினுள்ளே புகுந்து, மணித்தவிசின் மீது வீற்றிருந்தருளினார். அப்பொழுது இந்திரனும் ஏனைய தேவர்களும், "ஞானநாயகரே! அடியேங்கள் உமக்குச் சேனையாக நீர் சேனாதிபதியாகுக" என்று ஆகாய கங்காசலத்தினால் திருமஞ்சனமாட்டி, செம்பட்டு ஆடைசாத்தி, சந்தனக் குழம்பு மட்டித்து, திவ்வியாபரணங்கள் அணிந்து, நறுமலர் மாலைகள் சூட்டி, தூபதீபங்காட்டி, பூசைசெய்து வலஞ்செய்து, வணங்கித் தோத்திரம்பண்ணினார்கள். அதன்பின் முருகக்கடவுள் அங்குநின்று மறைந்து, திருக்கைலாசமலையை அடைந்தார். கந்தசுவாமி தேவர்கள் பூமாரி பெய்து பூசிப்ப எழுந்தருளியிருந்தமையால் அம்மலை கந்தவெற்பெனப் பெயர்பெற்றது. கந்தவெற்பை நீங்கி, இந்திரன் மனோவதி நகரத்தை அடைந்தான்; மற்றைத்தேவர்கள் எல்லாரும் தங்கள் தங்கள் தானத்திற் சென்று முன்போலிருந்தார்கள். திருக்கைலாசமலையை அடைந்த முருகக்கடவுள், இலக்கத்தொன்பது வீரர்களும் பூதர்களும் சேவிப்ப, அங்கே எழுந்தருளியிருந்தார்.

(தொடரும்).

ஓம் குஹாய நம:

கற்பு

சாவித்திரி

(612-ஆ பக்கத்தொடர்ச்சி)

இதே சமயத்தில், த்யுமத்சேனன் சிறந்தவன்மையும் கண்பார்வையும்பெற்று எல்லாவற்றையும் பார்த்தான். அவன் பத்தினியாகிய சைப்யையுடன் எல்லா ஆச்சிரமங்களிலுஞ்சென்று புத்திரனைத்தேடி அதிகமான துக்கத்தை அடைந்தான். அந்தத் தம்பதிகளிருவரும் அந்த இரவில் ஆச்சிரமங்களிலும் நதிகளிலும் வனங்களிலும் தடாகங்களிலும் போய்த் தேடினார்கள். ஏதாவது சத்தத்தைக் கேட்டால் புத்திரனுடைய சத்தமோ என்கிற சந்தேகத்தால், அந்தச்சத்தமுண்டான இடத்தை நோக்கி, "சாவித்திரியோடு சத்தியவான் வருகிறான்" என்று பேசிக்கொண்டார்கள். தர்ப்பங்களும் முட்களும் உடம்பைக்கிழிக்க, கால்கள் தேய்ந்து உதிரமுண்டாகி வருந்த பித்துப்பிடித்தவர்களைப்போல் ஓடினார்கள். அவ்வனத்துள்ள முனிவர்கள் இவர்களது பரிதாபநிலையைக்கண்டு மனம்வருந்தி அவர்களைத்தேற்றி ஆச்சிரமத்தில் அழைத்துக்கொண்டுவந்துவிட்டார்கள். முனிவர்கள் அந்த மன்னனைச்சூழ்ந்து இருந்து பண்டையரசர்களுடைய ஆச்சரியகரமான கதைகளைச் சொல்லி சமாதானப்படுத்தினார்கள். வயது சென்றவர்களான அவ்விருவர்களும் ஆறுதலையடைவிக்கப்பட்டும் புத்திரனைப் பார்க்கவேண்டுமென்கிற விருப்பத்தால், அவனுடைய இளமைப்பருவந்தொட்டுள்ள அழகிய சரித்திரங்களையும், சாவித்திரியின் குணாதிசயங்களையும் ஒருவருக்கொருவர் நினைப்பூட்டிக்கொண்டு துன்பக்கடலில் மூழ்கித்தவித்தார்கள். துயரத்தால் மிகவும் வாடிய அவ்விருமுதுகுரவர்களும், "ஆ! புத்ரா! எங்கே இருக்கிறாய்? ஆ! மருமகளே! ஆ! பதிவிரதையே! எங்கே இருக்கிறாய்?" என்று ஓவென்று இரக்கமாகக் கதறிக்கொண்டு அழுதார்கள்.

அங்கிருந்தவர்களுள், சத்தியமான வாக்குள்ள சுவர்ச்சஸ ஒரு வேதியர் அவ்விருவரையும்பார்த்து, "இந்தச் சத்தியவானுடைய

மனைவியான சாவித்திரியம்மை தவமும் இந்திரிய நிக்கிரகமும் ஆசாரமுமுள்ளவளாக இருத்தலால், இவன் உயிரோடிருக்கிறான்" என்றார். கௌதமர், "வேதங்களையும் அங்கங்களையும் ஓதியுணர்ந்திருக்கிறேன், பெரியதவம் செய்திருக்கிறேன், கௌமாரத்தைத்தொடங்கிய பிரமசரியவிரதத்தை யனுஷ்டித்திருக்கிறேன், குருவையும் அக்கினியையும் திருப்திசெய்திருக்கிறேன்; மனஅடக்கத்துடன் எல்லா விரதங்களையும் அனுஷ்டித்திருக்கிறேன்; எப்பொழுதும் காற்றைப் புசித்துக்கொண்டு உபவாசமாக இருக்கிறேன், இவ்விதமான ஒழுக்கத்தாலும் தவத்தாலும் பிறர்செய்யவிரும்பிய எல்லாவற்றையும் நான் அறிகிறேன்; "சத்தியவான் உயிரோடிருக்கிறான்; என்ற எனது வசனத்தை உண்மையென்று அறியுங்கள்" என்றார். சீடன், எனது குருநாதருடைய வாக்கிலிருந்து வெளிப்பட்ட சொல்லின்படியே சத்தியவான் சுகமாக இருக்கிறான், இது ஒருபோதும் பொய்யாகாது" என்று சொன்னான். இருடிகள், "இந்த சத்தியவானுடைய மனைவியான சாவித்திரி சௌமங்கலியத்தை உண்டுபண்ணுகிற எல்லா நல்லிலக்கணங்களோடும் கூடியிருத்தலால் உமது மகன் ஜீவித்திருக்கிறான்" என்றார்கள். பாரத்துவாசர், "சாவித்திரிதேவி மகாபதிவிரதையா யிருத்தலால் இவன் உயிரோடிருக்கிறான்" என்றார். தால்ப்யர் "உமக்கு கண்கள் விளக்கமுற்றமையாலும், சாவித்திரி விரதத்தைச்செய்து ஆகாரஞ்செய்துகொள்ளாமலே கானகஞ் சென்றமையாலும், சத்தியவான் யாதொரு தீங்குமின்றி சுகித்திருக்கின்றான்" என்றார். ஆபஸ்தம்பர், எதனால் மிருகங்களும் பறவைகளும் தெளிந்திருக்கிற திசையில் உமக்குப் பூமிசம்பந்தமான பெருக்கத்தைச்சொல்லுகின்றனவோ அதனால் சத்தியவான் உயிரோடிருக்கிறான்" என்றார். தௌம்யர், "எல்லா நற்குணங்களும் ஜனங்களுக்குப் பிரியமானவனும் நல்லிலக்கணங்களுள்ளவனுமாக இருத்தலால் உமமுடைய புத்திரன் தீர்க்காயுளுள்ளவனாக இருக்கிறான்" என்றார்.

சத்தியவாக்குள்ள அந்தத்தவசிகளால் இவ்வண்ணம் தேற்றப்பட்ட தியுமத்சேனன், அத்தருமவசனங்கள் முழுமையும் ஆராய்ந்து உறுதியுள்ளவன்போலானான். பிறகு ஒரு முகூர்த்தகாலத்திற்குப் பின், சாவித்திரி தனது கணவனுடன் மிக்கமகிழ்ச்சியுடன் அந்த இரவிலேயே வந்து ஆச்சிரமத்தில் புகுந்தாள் அங்கிருந்த எல்லாரும் பார்த்தவுடன் எழுந்திருந்தார்கள், மகிழ்ந்தார்கள், சத்தியவானு

டைய தாய்தந்தைகள் அவனுடைய கழுத்தைக்கட்டிக்கொண்டு அழுதார்கள், மறையோர்கள், "வேந்தே! புத்திரரோடு சேர்ந்தவனும் கண்களை அடைந்தவனுமான உன்னைப்பார்த்து நாங்கள் எல்லோரும் உன்னுடைய க்ஷேமத்தை வினவுகிறோம்; குணசீல! புத்திரனது வரவு, சாவித்திரியின் தரிசனம், கண்ணொளியைப்பெற்றது இந்த மூன்றினாலும் நீ வளர்ச்சியை அடைந்திருக்கிறாய், எங்களெல்லோராலும் எது சொல்லப்பட்டதோ அது அப்படியேயாகும், இதில் ஐயமில்லை. மேலும் மேலும் செல்வப்பெருக்கமானது உனக்கு விரைவாகவே உண்டாகும்" என்றார்கள் பிறகு அந்த அந்தணர்கள் அனைவரும் அங்கு அக்கினியை நன்றாகப் பிரகாசிக்கச்செய்து த்யுமத்சேனனருகில் உட்கார்ந்தார்கள். சைப்பியையும் சத்தியவானும் சாவித்திரியும் ஒருபுறத்தில் நின்றார்கள் அவர்கள் துன்பம் நீங்கி எல்லோராலும் அனுமதிகொடுக்கப்பட்டு உட்கார்ந்தார்கள்.

அரசனுடன் உட்கார்ந்திருந்த முனிவர்கள் அவனுடன் மன்னர் மகனை நோக்கி, "அரசகுமார! யாது காரணத்தால் பத்தினியுடன் முன்னரே வரவில்லை? ஏன் நடுநிசியில் வந்தாய்? உனக்கு என்ன தடை ஏற்பட்டது? பிரபுவே! மாதாவும் பிதாவும் நாங்களும் வருத்தத்தையடைந்தோம்; உனது தாமதத்தின் காரணத்தையறியோம்; அதனை நீ யுரைப்பாய்" என்று வினவினார்கள். சத்தியவான், "பிதாவினால் அனுமதிகொடுக்கப்பட்ட நான் சாவித்திரியுடன் சென்றேன், வனத்தில் விறகுகளைப் பிளக்கும்பொழுது எனக்குத் தலைவலியுண்டாயிற்று; வேதனையினால் நான் நெடுநேரம் தூங்கிவிட்டேனென்று எண்ணுகிறேன்; இதற்குமுன் ஒருபொழுதும் நான் அவ்வளவுநேரம் தூங்கினவனல்லேன், உங்களனைவருக்குமே சந்தாபம் உண்டாகவேண்டாமென்கிற காரணத்தினால் நடுநிசியில் நான் இங்கு வந்தேன். இந்த விஷயத்தில் வேறு காரணம் இல்லை" என்றான்,

கௌதமர், "சத்தியவானே! நின் தந்தைக்குத் திடீரென்று கண் கிடைத்திருக்கின்றது; இதற்குக் காரணத்தை நீ அறியாய்; சாவித்திரி சொல்வதற்குத் தகுதியுள்ளாள். சாவித்திரி! ஒளியினால் உன்னை சாவித்திரிதேவியைப்போலவன்றோ அறிகிறேன்? இந்த சம்பவத்தின் காரணத்தை நீ அறிவாய்; ஆகையால், உண்மையைச் சொல்' என்று வினவினார். சாவித்திரி, "நீர் அறிந்தது சரிதான்; உங்களுடைய எண்ணம் வேறுவிதமாகாது, எனக்கு ரகசியம் ஒன்று

மில்லையன்றோ? உண்மையையுரைப்பேன், மகாத்துமாவான நாரத முனிவர் எனது பதியின் மரணத்தைக்கூறினார். அன்று தொடங்கி யான் நியமத்துடன் விரதங்களையனுஷ்டித்து என்பதியின் தீர்க்காயுளைவேண்டித் தவவொழுக்கத்துடனிருந்தேன். நாரதர் குறிப்பிட்ட அந்த நாள் இன்றுவந்துவிட்டது; அதனால் இன்று நான் இவரைத் தனியாக விடவில்லை; உறங்கிக்கொண்டிருக்கிற என் கணவரது பக்கத்தில் அறக்கடவுள் வந்தார், அவர் இவரைப் பாசத்தாற் கட்டிக்கொண்டு பிதுருக்களாலடையப்பட்ட திசையில் கொண்டுபோனார்; நான் அவரைத் தொடர்ந்துபோய் சத்தியமான வசனத்தால் அந்த யமபகவானைத் துதித்தேன்; அவர் எனக்குத் தனித்தனியாக ஐந்து வரங்களை வழங்கினார், எனது மாமனாருக்குக் கண்களும் இராஜ்யமும் உண்டாகுமாறு இருவரமும், எனது பிதாவுக்கு நூறுபுத்திரர்களும் எனக்கு நூறு புத்திரர்களும் உண்டாகுமாறு இருவரமும், என் கணவர் நானூறு வருடம் சுகித்திருக்க ஒரு வரமுமாகும். பதியினுடைய உயிரை விரும்பி இந்த விரதத்தை நான் உறுதியுடன்செய்தேன். இதுதான் நடந்த சம்பவம். இந்த எனது துன்பம் முடிவில் இன்பமாய் முடிந்தது என்றாள்

இருடிகள், "கற்பிற் சிறந்த காரிகையே! நற்குலத்திற் பிறந்தவளும் நல்லொழுக்கமும் விரதமும் புண்ணியமும் பொருந்தியவளுமான உன்னால் இருளமயமான மடுவில் முழுகுவதும் துன்பமாகிய மிருகத்தால் துரத்தப்பட்டதுமாகிய அரசனுடைய குலமானது மீண்டும கைதூக்கி மேலேவிடப்பட்டது. பாக்கியவதியே! உன்னால் பிறந்த வீடும் புகுந்தவீடும் பெருமையுற்றன" என்றார்கள். ஒன்று சேர்ந்திருக்கிற மாதவர்கள் மகாபதிவிரதையாகிய அந்த உத்தமியை பலவாராகப் புகழ்ந்தும் பூசித்தும் மன்னனிடம் விடை பெற்றுக்கொண்டு மகிழ்ச்சியுடன் தங்கள் வீடுகளுக்குச் சுகமாகச் சென்றார்கள்.

அந்த இரவுகழிந்து சூரியன் உதித்தவுடன் அந்த எல்லாத்தவசிகளும் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு ஒன்றுகூடினார்கள். தியுமத்சேனனும் சைப்யையும் மருமகளது பெருமையை நினைந்து வாயார வாழ்த்திக் கொண்டாடினார்கள். மகரிஷிகள் சாவித்திரியினுடைய மகிமையை தியுமத்சேனனுக்கு அடிக்கடி சொல்லியும் இன்னும் சொல்லவேண்டுமென்ற விருப்பமே கொண்டார்கள். பிறகு சால்வதேயத்திலிருந்து எல்லா ஜனங்களும் அரசனிடம் வந்தார்கள்.

அவனுடைய திருவடியில் விழுந்து வணங்கி, "தங்களுடைய மந்திரியார் அந்தப் பகைவனைக் கொன்றுவிட்டார், அரசரே! பகைவனுடைய படை பயந்து ஓடிவிட்டது, எல்லா ஜனங்களும் "கண்ணுள்ளவரோ கண்ணில்லாதவரோ அந்த தியுமத்சேனரே நமக்கு அரசராக இருக்கவேண்டும்" என்று ஒரே எண்ணமாக இருக்கிறார்கள்; இந்த நிச்சயத்துடன் ஜனங்களால் அனுப்பப்பட்டோம். இதோ வாகனங்களும் தங்களுடைய நால்வகைச் சேனைகளும் வந்திருக்கின்றன. மண்டலேசுவரரே! புறப்படுவீராக, உமக்கு மங்களம்- உமமுடைய ஜயமானது நகரத்தில் முழக்கப்பட்டது. உமது மூதாதைகள் பரம்பரையாக அரசுசெய்துவந்த அரியணையில் வீற்றிருந்து நெடுங்காலம் அரசு செய்வீராக" என்று சொல்லி மலர்ந்த கண்களுடன் அரசனைத் திருமபவும் வணங்கினார்கள்.

பிறகு, மன்னன், அந்தத் தவ வனத்திலுள்ளவர்களும் வயது முதிர்ந்தவர்களுமான எல்லா முனிவர்களிடமும் பிரியா விடைபெற்றுக்கொண்டு நகரத்தைக்குறித்துச் சென்றான். சைப்யையும சாவித்திரியோடுகூட சேனையினால் சூழப்பட்டவளாக நல்ல விரிப்புகளுள்ளதும் ஒளிவீசுவதும் மனிதர்களால் தூக்கப்பட்டதுமான பொறபல்லக்கிலூர்ந்து தனது நகரஞ் சேர்ந்தாள். நல்ல நாளில் புரோகிதர்கள் சகலவைபவங்களுடன் தியுமத்சேனனுக்கு மகுடாபிஷேகஞ் செய்தார்கள். ஒப்பற்ற வீரனாகிய சத்தியவானுக்கு இளவரசு பட்டாபிஷேகம் புரிந்தார்கள். இந்த நற்செய்திகளைக்கேட்டு சாவித்திரியின் பிதாவாகிய அச்சுவபதிமன்னன் பரிவாரங்களோடுவந்து, சம்பந்தியையும் மருமகனையும் மகளையும் பார்த்து கொண்டாடி, மகளது அற்புதச்செயல்களைக்கேட்டு, உடலும் உளமும் பூரித்து, குலத்தைவிளக்க வந்த கொடியிடையாளை வாழ்த்தினான்.

சில நாட்களுக்குப்பின், சாவித்திரிக்குப் புகழை வளர்க்கிற தேவகுமாரர்களைப்போன்ற நூறு புத்திரர்கள் பிறந்தார்கள். அப்படியே மத்திரதேசாதிபதியாகிய அச்சுவபதிக்கு மாளவியிடம் சூரர்களும் போரில் பின்வாங்காத வீரர்களும் மிக்க பலசாலிகளுமாகிய நூறு குமாரர்கள் பிறந்தார்கள். சாவித்திரியினால் தான், தகப்பன், தாய், மாமியார், மாமனார், கணவன், குலம் ஆகிய அனைவரும் கரையேற்றப்பட்டார். மகா பதிவிரதா சிரோன்மணியாகிய அவ்வுத்தமியால் தந்தையின் குலமும் தனது கணவனது குலமும் வளர்ச்சியுற்

உ

கார்த்திகேயன் துணை.

வானப்பிரஸ்தம்.

(159-வது பக்கத் தொடர்ச்சி)

இந்த வானப்பிரஸ்த ஆச்சிரமத்தைப்பற்றி முற்காலத்தில் மகானுபாவராகிய வியாசமுனிவர் தமது புத்திரராகிய சுகருக்குச் சொல்லியுள்ளார். புண்ணியமிகுந்தவர்களும் ஆன்மலாபத்தையடைய விழைகின்றோரும இதனை அன்புடன் மேற்கொள்வர். இது மனிதனுக்கு மூன்றாவது நிலை, கிருகஸ்தனானவன் எப்பொழுது உடலில் தோல் சுருக்கத்தையும நரையையும பௌத்திரனையும பார்ப்பானோ அப்பொழுதே வனத்தை யடையவேண்டும. வானப்பிரஸ்த நிலையை யடையுங்கால் தன் மனைவியைப் புத்திரனிடத்தில் வைத்துவிட்டாயினும், தன்னோடு கூட்டிக்கொண்டாயினும வனத்திற்செல்லவேண்டும். அவ்வாறு வனத்திற்சென்று மனத்தையடக்கித் தவஞ்செய்தல் வேண்டும். ஆயுளின மூன்றாவது பாகத்தில் இதனை மேற்கொள்ள வேண்டும். சடையும் தாடியும் மீசையும் நகமும் வளர்த்துக்கொண்டும், மரவுரி மானதோல் முதலியவைகளை உடுத்திக்கொண்டும், தழைகளினாற் செய்யப்பட்ட குடிசைகளில் வாசஞ்செய்தல்வேண்டும தெய்வ வழிபாடும் நியமமுடையவனாயிருக்கவேண்டும். ருசியைக் கருதாது பசித்தபோது கிடைத்த உணவை உண்ணல்வேண்டும். ஆறாவதுகாலத்தில் (பகல் பதினெட்டேமுக்கால் நாழிகை, 1½மணி) உணவருந்தல்வேண்டும். தவறு செய்யாமல் தவநிலையிலேயே காலங் கழித்தல்வேண்டும். அதிதிகளுக்கு அன்னமிடுவதற்காகவும் தனது பசியை யாற்றுவதற்காகவும் சிலர் அந்த அந்தச் சமயத்திலேயே

றன. எல்லோருக்கும மகிழ்ச்சியைத்தந்து இன்றும் என்றும் அழியாத புகழுடம்பைப்பெற்று நிலவுகின்றாள்,

பெண்மணிகள் இக்கற்பரசியின் உத்தமமான சரித்திரத்தை அன்புடன் ஊன்றிப்படித்து, அவ்வண்ணம நல்லொழுக்கத்தை மேற்கொண்டு பிறந்த வீட்டையும் புகுந்த வீட்டையும் வளர்ச்சியுறச் செய்து பொன்றாப்புகழைப் பெறுவார்களாக. அங்ஙனமே "என்னுளமேவிய ஸ்ரீ வள்ளிநாயகியார்" திருவருள்புரிவாராக.

(தொடரும்).

தேடி உடனே செலவழிக்கிறார்கள் ; சிலர் ஒரு மாதத்திற்கும், சிலர் ஒரு வருடத்திற்கும், சிலர் பன்னிரு வருடத்திற்கும் தேடிவைத்துக் கொள்ளுகிறார்கள். ஊரில் உண்ணத்தக்க உணவுகளைவிட்டு வனத்திலுள்ள கனி கிழங்கு முதலியவைகளையே உணணல்வேண்டும், அவை கிடையாதொழியின், மற்றை வானப்பிரஸ்தரிடத்திலேனும வனவாசஞ்செய்யும கிருகஸ்தரிடத்திலேனும பிக்ஷையேற்று உண்ணலாம். அவர்களுடை இல்லாதபோது ஊரிறபோய எட்டுக்கவள அன்னம் வாங்கிப புசிக்கலாம் மழைக்காலத்தில் ஆகாய வெளியிலும் பனிக்காலத்தில் தணணீரிலும், வேனிறகாலத்தில் பஞ்சாக்கினி மத்தியிலும இருந்துகொண்டு தவஞ்செயதல்வேண்டும். தரையில் படுத்தல்வேண்டும. சிலா கால்நுனிகளால் நின்றும், பலவகை ஆசனங்களைப்போட்டுக்கொணடும இருந்து தவமபுரிகின்றனர். சிலர் பற்களையே உரலாக உடையவாகள், சிலர் கல்லினால் தேய்த்து அரிசியாக்குகிறாாகள். சிலர் சுக்லபக்ஷத்தில் ஒருவேளை சூடுள்ள கஞ்சியைப் பானஞ்செய்கிறார்கள். சிலா கிருஷ்ணபக்ஷத்தில் அவ்விதமே பானஞ்செய்கிறார்கள் அலலது முன்வழக்கப்படி அன்னத்தையாவது புசிக்கிறார்கள், முப்பொழுதும ஸ்நாடி அக்கினிகாரியங்களைச்செய்து விரதங்களை அனுஷ்டித்தல்வேண்டும. வேத சிரசுகளாகிய உபநிடதங்களையே பாராயணஞ்செய்தல் வேணடும். அகத்தியர், சப்த இருடிகள் மதுச்சந்தா, அகமர்ஷணர், ஸாங்க்ருதி, ஸுதிவாதண்டி, யதாவாசர், அக்ருதச்ரமர், அகோரவீர்யர், காவ்யர், தாண்டியா, மேதாதிதி, புதர், பலவான், கர்ணநிர்வாஹா, சூன்யபாலா, கிருதச்ரமர் முதலியோர் இவ்வானப்பிரஸ்த தருமத்தில் இருந்து பாகதிபெறறார்கள். வானப்பிரஸ்தனுக்கு புணர்ச்சி கூடாது. கோபமும் மோகமும், நட்பும் பகையும் இல்லாமல் சர்வபிராணிகளுக்கும் இதத்தையே செய்துக்கொண்டு சாந்தமுள்ள மனததுடன் இருத்தல்வேண்டும். காமாதியறுபகைவரையும் வென்று, இநதிரிய அடக்கத்துடன் இருத்தல் வேண்டும். இவ்வாறு நியமத்துடனும் உறுதியுடனும் இந்த வானப்பிரஸ்த நிலையில் நிற்பவன் அழிவிலலாத மோக்ஷவுலகை யடைகின்றனன். அவனுடைய தவவொளியானது விண்ணாட்டை அலங்கரிக்கும். அவனுக்கு நிகரானவர் மூவுலகிலுமில்லை. அவனுக்கு அடையத்தகாதபொருள் எந்த உலகத்திலுமில்லை. இகபாசித்தியை யடைகின்றனன்.

ஓம் குஹாய நம:

நான்கு இரத்தினங்கள்

(1) தான்செய்த தருமத்தைப்பற்றி தானே புகழாமலிருத்தல்; (2) ஒருவருக்கு ஒன்றைக்கொடுத்தபின் அது விஷயத்தில் மனம் வருந்தாமலிருத்தல், (3) ஒரு பொருளை ஒருவன் கேட்கும்போது "எல்லாம் உங்களுடையதே" என்றுகூறி ஏமாற்றாமலிருத்தல்; (4) அளவுக்கு மீறிய பொறுமை; இந்த நான்கும் நம்மால் அவசியம் அனுஷ்டிக்கத்தக்கவை.

(1) அநேகர் தாங்கள் செய்த தருமத்தைப் பலரறியுமாறு தாமாகவே சொல்லிக்கொள்ளுகிறார்கள். "இந்தக்கோயில் நான் கட்டிவைத்தது; இந்த தருமச்சாலை என் சொந்த செலவில் கட்டப்பட்டது; எங்கள் வீட்டில் தினம் 10 பேர் சாப்பிடுகிறார்கள்; என்று இப்படி தாங்கள் செய்யும் தருமத்தைத் தாமாகவே புகழ்ந்து கூறுவதால் அத்தருமத்தின பலன் குறைகிறது. ஆதலால் தருமஞ்செய்யும் உத்தமசீலர்கள் இந்த விஷயத்தில் கவனிப்புடன் தம்முடைய தருமங்களைத்தாமாக மிகமிக அவசியம் என்று தோன்றாத காலங்களிலெல்லாம் புகழ்ந்து கூறாமலிருத்தல் வேண்டும்.

(2) சிலர் தருமத்தைச் செய்துவிட்டு பின், "அதிகம்கொடுத்துவிட்டோம்" "நம்மை ஏமாற்றி வாங்கிவிட்டார்கள்" "தொந்தரையாகிவிட்டது" என்று பலவாறுகூறி மனம் வருந்துகிறார்கள். அதனால் தாம் செய்த தருமத்தின் பலன் பாதிக்குமேல் குறைந்துவிடுகின்றது. அப்படி வருந்தியதால் என்ன பயன்? ஏதாவது பொருள் வருமா? தருமத்தையுஞ் செய்துவிட்டு பலனையும் இழந்துவிடுகின்றார்கள். ஆதலால் தருமத்தில் விருப்பமுடைய அன்பர்கள் இந்த விஷயத்தில் ஞாபகஞ்செலுத்தி தருமஞ் செய்துவிட்டு "ஏன் கொடுத்தோம்" "அதிகம் தந்துவிட்டோம்" என்று வருந்தாதிருக்கவேண்டும்.

(3) சிலர் தங்களை யாராவது ஒரு பொருளைக்கேட்டால், "இது மட்டுமா? "எல்லாம் உம்முடையதே, உங்களுடைய பொருளை நான் என்ன தருவது? இந்தவீடும் தங்களுடையதே" என்று மிகவும் நய

யாகவும் உபாயமாகவும்பேசி முடிவில் அந்தப் பொருளைக் கொடுக்காமலே தந்திரஞ்செய்துவிடுகிறார்கள். அது அறிஞர்களால் வெறுக்கத்தக்கது. ஆதலால் ஒருவன் ஒரு பொருளைக்கேட்டால் "உம்முடையதே" என்று நயபுராறு கூறி டீலகாலும் அவனை அலையவிடாமல் முதலிலேயே "இது தருவதற்கில்லை" என்று கூறிவிடுவது உத்தமம்.

(4) என்ன துன்பம் நேர்ந்தாலும், பெரியோர்கள் எதை எப்படி கேட்டாலும், தன்னை எப்படி நிந்தித்தாலும் அன்னியர்களால் என்ன இன்னல் வந்தாலும் பொறுமையுடனிருப்பது இந்த வகையான பொறுமை மேற்கொண்டவனை யுகமுடிவில் தோன்றும் சண்டமாருதத்தாலும் அசைக்கமுடியாது. அவனை யாராலும் அழிக்க முடியாது. அவனிடம் சகல தேவர்களும் தானே வந்து திருவருள் புரிவார்கள். இந்த நான்கு நீதிகளை விளக்கும் பூர்வ சரித்திரம் ஒன்றை ஈண்டு விளக்குதும் அன்பர்கள் இதனை நன்கு ஓதியுணர்ந்து அவ்வண்ணம் ஒழுகுவார்களாக.

பூர்வத்தில் புகழ்பெற்ற அஷ்டக னென்ற ஒரு அரசனிருந்தான். அவன் விஸ்வாமித்திரருடைய மைந்தன். அம்மன்னர்பெருமான் ஒரு பெரும் வேள்வியைச் செய்தான். அந்த அசுவமேதயாகத்திற்கு எல்லா அரசர்களும் சென்றார்கள். அந்த அஷ்டகனுடைய சகோதரர்களான பிரதர்த்தனன், வஸுமனஸ் உசீனரதேசாதிபதியாகிய சிபி என்பவர்களும் சென்றிருந்தார்கள். மந்திர முறைப்படி யாகம் நிறைவேறியது. முடிவில் அஷ்டகன் தன் சகோதரர்கள் மூவருடன் இரதத்திலூர்ந்து செல்லலானான். யாழ்வல்லோராகிய நாரதர் எதிர்ப்பட்டார் அவரை அந்த நால்வர்களும் வணங்கி, தாங்களும் இந்தத் தேரில் ஏறிக்கொள்ளவேண்டும" என்றார்கள். நாரதர், "அப்படியே" என்று சொல்லி விமானத்திலேறினார். பிறகு அவர்களுள் ஒருவன், தேவரிஷியாகிய நாரதரைப்பார்த்து "பகவானே தேவரீரை ஒரு விஷயத்தைக் கேட்க விரும்புகிறேன்; கருணைகூர்ந்து சொல்லியருளவேண்டும்" என்று சொன்னான். நாரதர் அவனைப் பார்த்து "எந்த விஷயத்தைப்பற்றியும் கேள்" என்றார்.

அவன், "வீணை முனிவரே! நாம் ஐவர்களும் நீண்ட ஆயுளுள்ளவர்கள், நற்குணமுடையவர்கள், நெடுங்காலம் அனுபவிக்கத்தக்க சுவர்க்க லோகமானது நால்வரால்." மட்டும் செல்லத்தக்கதாயிருந்தால் ஐவர்களாகிய நம்முள் யார் இறங்கவேண்டும்?" என்று கேட்

டான். நாரதர், "இந்த அஷ்டகன், இறங்கவேண்டும்" என்றார். அவன், "என்ன காரணம்" என்றான். நாரதர், 'நான் ஒரு சமயத்தில் அஷ்டகனுடைய அரண்மனையில் வசித்தேன; அவன் என்னை ஒருநாள தேரில் ஏற்றிக்கொண்டு உலாவினான. பிறகு தனித்தனியாக நிறததிறகுத்தக்கபடி பிரிக்கபபட்டிருக்கிற ஆயிரக்கணக்கான பசுமாடுகளை நான் பார்த்தேன். நான அவனைப்பார்த்து, "இவை யாருடைய பசுக்கள்" என்று கேட்டேன். அஷ்டகன், "இவைகள் என்னால் தானஞ்செய்யபபட்டவை" என்று சொல்லிய அதனாலேயே தானே தன்னைப் புகழ்ந்துகொண்டான்; ஆதலால இவன் இறங்க வேண்டும" என்றார்.

பிறகு முன்கேட்டவன், "மூவரால்மட்டும் போகத்தக்கதாயிருந்தால் இப்பொழுது யார் இறங்கவேணடும்" என்று கேட்டான். நாரதா, "பிரதர்த்தனன் இறங்கவேண்டும்" எனறார். கேட்டவன், "அந்த விஷயததில யாது காரணம்?" என்று கேட்க, நாரதா, "பிரதர்த்தனுடைய வீட்டிலும் நான் வாசஞ்செய்திருக்கிறேன்; அவனும் நானும் ஒருநாள் தேரின்மீது ஏறிச் சென்றோம்; வழியில் ஒரு பிராம்மணன், "எனக்கு நீ ஒரு குதிரையைக்கொடுக்கவேண்டும" என்று யாசித்தான். அரசன் பிராம்மணனை நோக்கி, "நான திரும்பி வந்து கொடுப்பேன்" எனறான். வேதியன், "விரைவாகவே கொடுக்கக்கடவாய்" என்று கேட்டான். அவன், "அப்படியே" என்று சொல்லி வலப்பக்கத்தில் தேரிற்பூட்டிய குதிரையை விரைவாகவே அவிழ்த்து பிராமணனுக்குக் கொடுத்தான். பிறகு மற்றொரு பிராம்மணன் வந்து ஒரு குதிரையை யாசித்தான். அரசன், "அப்படியே" என்று சொல்லி இடப்பக்கத்திற்பூட்டிய குதிரையைக்கொடுத்தான். வேறொரு வேதியன் வந்து ஒரு குதிரையைக் கேட்டான். இன்னொரு குதிரையையும் அவிழ்த்துக்கொடுத்தான். திரும்பவும் மறறொரு மறையவன்வந்து, "சீக்கிரம ஒரு குதிரையைக் கொடு" என்றான். மன்னன், "அப்படியே தருகிறேன்" என்று நாலாவது குதிரையையும் அவிழ்த்துக்கொடுத்துவிட்டு, தேரின் நுகக் கொம்பைத் தானே தாங்கிக்கொண்டு, "பிராம்மணாகளுக்குத் தக்கது தகாதது என்கிற ஆலோசனை சிறிதும இல்லை" என்று சொன்னான். கொடுத்துவிட்டு அஸூயை அடைகிற இந்தப் பிரதர்த்தன்; அப்படிப் பட்ட அந்த வசனத்தினால் விமானத்திலிருந்து இறங்கவேண்டும் என்று கூறினார்.

கேட்டவன், "முனிநாதரே! இருவரால்மட்டும் செல்லத்தக்க தாயிருந்தால் யார் இறங்கவேண்டும்? என்று வினவ, நாரதர் "வஸுமனஸ் இறங்கவேண்டும்" என்றார். கேட்டவன், "காரணம்யாது?" என்று கேட்க, நாரதர், "நான் உலகங்களில் சஞ்சரித்துக்கொண்டு வஸுமனஸினுடைய வீட்டையடைந்தேன். அப்பொழுது அவன் அவன்வீட்டில் மங்களகாரியம் ஒன்றின் தொடக்கத்தில் மந்திரங்களைச்சொல்லி அக்ஷதையிறைப்பதாகிய ஸ்வஸ்திவசனங்கள் நடந்து கொண்டிருந்தன. காடு மலை கடல் முதலிய இடங்களில் தடைப்படாது செல்லக்கூடிய புஷ்ப ரதத்தை விரும்பி அவனை அனுசரித்தேன். பிராம்மணர்கள் ஸ்வஸ்தி வசனம் சொல்லிய பிறகு, அவர்களுக்குத் தன்னிடமுள்ள புஷ்பரதத்தைக் காட்டினான். அந்த ரதத்தை நான் புகழ்ந்தேன், அரசன், "தவமுனிவராகிய தங்களால் இந்த ரதம் புகழப்பட்டது, இது தங்களுடையதே; தங்களுடையதே," என்று சொன்னான். பிறகு ஒருகால் நான் வஸுமனஸை அணுகினேன்; மறுபடியுமே எனக்குப் புஷ்ப ரதத்தால் காரியம் ஆக வேண்டியிருந்தது. அரசன் "சிறப்புடையதான புஷ்ப ரதம் பகவானுடையது" என்று கூறினான். மூன்றாவது முறையும் நான் அதை வேண்டிப்போயிருந்தேன். அப்போதும் அவன் "இது தங்களுடையதே" என்று அதனைக் கொடுக்காமலே மோசவார்த்தை கூறினான். புஷ்பரதத்தைக் கொடாமல் இந்த மோசவார்த்தை சொல்லியதால் இவன் கீழே இறங்கவேண்டும்" என்றார்.

கேட்டவன், பிறகு, "பகவானே! ஒருவரால்மட்டும் செல்லத் தக்கதாக இருந்தால் யார் இறங்கவேண்டும்" என்று வினவ, நாரதர், "சிபி செல்லக்கடவன்; நான் இறங்கவேண்டும்" என்று சொன்னார். கேட்டவன், "இந்த விஷயத்தில் காரணம் என்ன?" என்று வினவ, நாரதர், "நான் சிபிக்கு நிகரானவனல்லேன், என்னைவிட சிபி உயர்ந்தவன்; ஏனென்றால் பிராம்மணனொருவன் இந்தச் சிபியைப்பார்த்து "சிபியே! நான் அன்னத்தை விரும்புகிறேன்" என்று சொன்னான். சிபி, பிராம்மணனை நோக்கி, "என்னசெய்யவேண்டும்? நீர் கட்டளையிடும்" என்று சொன்னான். பிராம்மணன், சிபியை நோக்கி, "பிருஹத்கர்ப்பன் உன்னுடைய புத்திரனைக் கொல்லவேண்டும்; அப்படிக்கொல்லப்பட்ட இவன் மாமிசத்தைப் பக்குவஞ்செய்து அன்னத்துடன் சித்தஞ்செய்வாயாக; பிறகு என்னை போஜனத்திற்கு எதிர்பார்க்கவேண்டும்" என்று சொன்னான். பிறகு, அரசன் சிறி

தேனும் தயங்காமலும் முகம் வாடாமலும் புத்திரனைக் கொன்று பக்குவஞ்செய்து முறைப்படி சித்தஞ்செய்து ஒரு பாத்திரத்தில் வைத்து, அதைத் தலையினால் தூக்கிக்கொண்டு பிராம்மணனைத் தேடினான். சிபி வேதியனைத் தேடிக்கொண்டிருக்கும்பொழுது, ஒருவன் ஓடிவந்து, "இந்தப்பிராம்மணன் உன் நகரத்தில் நுழைந்து கோபங்கொண்டு உன் அரண்மனையும் தனசாலையையும் ஆயுதசாலையையும் அந்தப்புரத்தையும் குதிரைச்சாலையையும் யானைச்சாலையையும் எரிக்கின்றான்" என்றான். சிபி, அப்படியே நிறம்மாறாத முகத்துடன் நகரத்தில் நுழைந்து அந்தப் பிராம்மணனைப்பார்த்து அன்புடன், "பகவானே! அன்னம் சித்தமாயிருக்கிறது" என்று சொன்னான். பிராம்மணன் ஒன்றும் பேசாமல் அவன் பொறுமையின் பெருமையைக்கண்டு ஆச்சரியத்தால் தலைகுனிந்து நின்றான். பிறகு, அரசன் "பகவானே! தாங்கள் சொல்லியபடி செய்திருக்கிறேன்; புசிக்கலாம்" என்று மிகவும் பணிவுடன் வேண்டினான். பிராம்மணன் ஒரு முகூர்த்தகாலத்திற்குப் பிறகு, சிபியை நிமிர்ந்துபார்த்து, "நீயே இதனைப்புசிப்பாயாக" என்றான். அப்பொழுது சிபி, "அப்படியே ஆகட்டும்" என்று கூறி மனத்தில் அருவருப்பில்லாதவனாகப் பிராம்மணனைப்பூசித்து, தலையின்மேல் வைத்திருந்த மாம்சத்தை எடுத்து புசிக்க எத்தனித்தான். உடனே, பிராம்மணன் இவனுடைய கையைப்பிடித்துக்கொண்டு "நீ கோபத்தை வென்றவனாக இருக்கிறாய், பெரியோர்களுக்காக விடத்தகாதது உனக்கு யாதொன்றுமில்லை" என்று சிபியை மிகவுங்கொண்டாடினான். உடனே சிபி தேவகுமாரனைப்போன்ற தன் குமாரனை எதிரில் நல்ல அழகுடன் கண்டான் நல்ல மணமுடனும் நல்ல அலங்காரத்துடனும் விளங்கும் தன் மகனைப்பார்த்து, சிபி அதிசயித்தான். உடனே பிராம்மணன் மறைந்தான். உலகங்களைப் படைக்கும் பிரமதேவரே இந்த சிபியைச் சோதிப்பதற்காக அப்படிவந்தார். அவர் மறைந்தவுடன் மந்திரிகள் அரசனை நோக்கி, "எல்லாவற்றையும் அறிந்தவராகிய தாங்கள் எதை அடையவிரும்பி இவ்வாறு செய்தீர்" என்று வினவினார்கள். சிபி, "இதை நான் புகழுக்காகவாவது பொருளுக்காகவாவது கொடுக்கவில்லை; சுகத்தை அனுபவிப்பதிலுள்ள ஆசையினாலும் கொடுக்கவில்லை. இந்த வழியானது பாவிகளால் அடையப்படாதது" என்று இவ்வாறு. இவ்வனைத்தையும் செய்கிறேன். சாதுக்களால் எப்போதும் அனுஷ்டிக்கப்பட்டதே சிறந்தது. ஆத

ஓம குஹாய நம:

தர்மம்

சச்சிதானந்தம்.

தர்மம் என்பது திரி என்ற தாதுவிலிருந்து பிறந்தது. திரி என்றால் காப்பாற்று 'தர்மம், தரித்தல், ஆன்மாவைத் தரிக்குதல் அதாவது ஆன்மா நிம்மதியாக விருக்கக்கூடியவிதம்.' ஆன்மலாபத்திற்கு உபாயம் தர்மம் எனப்படும். மானுடப்பிறவியின் கடமையை முடித்தலின் பெயர் தருமம். தமது விஷயத்தில் தாம் செய்யவேண்டிய கடமை, மாதா பிதாக்கள் விஷயத்தில் தாம் செய்யவேண்டிய கடமை, பத்தினி விஷயமாயும் மக்கள் விஷயமாயும் தாம் செய்ய வேண்டிய கடமை, அயலார் விஷயமாயும் பந்துக்கள் விஷயமாயும் செய்யவேண்டிய கடமை, ஏழைகள், தரித்திரதிசையிலுள்ளோர், திக்கற்றவர் இவர்கள் விஷயமாய்ச் செய்யவேண்டிய கடமை; ஸ்வதேசத்தைப்பற்றிச் செய்யவேண்டிய கடமை; இவை யனைத்தையும் முடித்தலின் பெயர் தருமம். தருமத்தைவிடச் சிறந்ததொன்றுமில்லை. தர்மம் மூன்று உலகத்தையும் பிரகாசிக்கச் செய்கிறது. தர்மம் எல்லா உயிர்களுக்கும் இனிமையானது; தர்மம் மண்ணுலகம் விண்ணுலகம் இரண்டிலும் சுகத்தைக்கொடுக்கிறது; உலகம் நிலையற்றது; தர்மம் நிலைபெற்றது; தர்மத்தினால்தான் நற்கதியடையமுடியும்; தர்மம் இறைவனுடைய மூத்த குமாரனாகும்; தர்மம் மோக்ஷ உலகத்திற்கு ஏணியைப்போன்றிருக்கிறது; தர்மத்தினால் பாபம் கெடுகின்றது. சுருதியில் :

தர்மேண பாபநுததி எனவும்

காஞ்சிப்புராணத்தில் :

அறமே மறங்கள் முழுதழிக்கு மறமே கடவு ளுலகேற்றும்
அறமே சிவனுக் கொருவடிவ மாதஞ் சிவனை வழிபடுவோர்க்

லால், என்புத்தியானது சிறந்ததையே பற்றுகிறது'' என்று கூறினான். ஆதலால் சிபியினுடைய இந்தப் பெருந்தன்மையை அறிகிறேன்'' என்று நாரதர் சொல்லிமுடித்தார்.

கறமே யெல்லாப் பெறும்பயனு மளிக்கும் யார்க்கும் எவ்விடத்தும்
அறமே யச்சந் தவிர்ப்பதெனை வறைந்தான் சாதா தபமுனிவன்

என்றும், விநாயக புராணத்தில்:

தேங்குவன போகமுஞ் சிறந்த முத்தியும்
ஈங்குது மார்க்கமு மின்று நல்கலால்
ஓங்கிய வறத்தினை யுளமுன் முன்றினும்
பாங்குற நித்தலும் பரிந்து செய்தியால்

என்றும், திருக்கூவப்புராணத்தில்:

தரும மேயினை யில்பொரு டாரயிடைத் தகை சால்
ஒருமை யன்பினை யுதவிவின் றுலசினு முடன் போய்
அருமை இன்பமுந் தந்தகுந் செறுமேனி லறமே
இருமை யுந்துணை யாதுவ தன்றிமற் றில்லை

என்றும், கந்தபுராணத்தில்:

தருமமென் றொருபொரு ளுளது தாவிலா
இருமையி னின்பமு மெளிதி னுக்குமால்
அருமையில் வரும்பொரு ளாத மன்னதும்
ஒருமையி னேர்க்கலா லுணர்தற் கொண்ணுமோ

என்றும், நீதிசாஸ்திரத்தில்:

ஸர்வரீதி பகலசந்த்ர: ப்ரபாதோத் தீபகோரவ.
த்ரைலோக்யதீபகோ தர்மஸ்ஸுபுத்ர குலதீபக:

என்றும் கூறப்பட்டுளது. ஆகவே தர்மத்தையனுஷ்டித்தல்வேண்டும். தைத்திரியம், சிக்ஷாவல்லி 11-வது அநுவாகம் 1-வது வாக்கியத்தில்:

தர்மஞ்சர தர்மாத்பரம் நாஸ்தி
ஸர்வேஷாம் பூதானும் மது!

ஆகவே ஒருபொழுதும் தருமத்தைவிட்டு வழுவலாகாது. தருமமார்க்கத்தில் நடப்போமாயின் நமக்குச் சிரச்சேதமுண்டாயினும் உண்மையான உயிர்ப்பைப்பெற்று அழிவற்ற பதவியை யடையவல்லோம்.

"தன்னைக் கொடுத்தாவது தர்மத்தைத் தேடவேண்டும்"

என்று பெரியோர்கள் மொழிகின்றனர். இதனால்தான் ஔவையும் "அறஞ்செய விரும்பு" என்றாள். தர்மானுஷ்டானமின்றி உள்ளம் பரிசுத்தமாவதில்லை; கடவுளுடைய அருளுங் கிடைப்பதில்லை. மதங்கொண்டவன், அஜாக்கிறதையுடையவன், பித்தன், களைப்படைந்தவன், கோபத்தையுடையவன், பசித்தவன், அவசரக்காரன், லோபி, பயந்தவன், காமி இப்பதின்மரும் தர்மத்தையறிகிறதில்லை. ஆகவே

இவர்களுடன் பழகாமல் தர்மவழியில் நின்ற பெரியோர்களுடன் கூடி தர்மத்தைச் செய்வதற்கு முயலவேண்டும். தர்மவழியாகவே தான் பணத்தைச் சம்பாதிக்கவேண்டும்; தர்மவழியில்லாமல் வருகின்றபணம், இன்பம், புகழ் முதலியவைகள் பயன்படமாட்டாது ; சேதுபுராணத்தில் :

> திருவு மின்பஞ் சிறப்பும் புகழுமற்
> றொருவ ராக்கலு நீக்கலு முள்ளவோ
> மருவும் புண்ணிய மாந்தர்க் கவையெலாந்
> தரும மின்றேனிற் றமே சிதையுமால்

என்றனர். தருமத்தின் வழியாக நடந்தால் யாவரும துணைசெய்வர். தர்மத்திற்கு விரோதமானவழியில் நடந்தால் உடன்பிறந்தவர்களும் துணைசெய்யார். தாசரதி தாமத்தின்பா லொழுகவேண்டுமென்று தன் அருமையான நாட்டையும் துறந்து காட்டிற்குச்சென்றார். அதனால் அவருக்கு மிருகங்களும் துணைசெய்தன. தசக்கிரீவன் தாமத்திற்கு விரோதமானவழியில் சென்றதினால் சகோதரர்களும துணைசெய்யவில்லை. ஆகவே தர்மத்தின் வழியாகவே நடக்கவேண்டும். ஏழைகள் விஷயமாய் தர்மஞ்செய்யவேண்டும் அந்தோ ! கலிகாலத்தில் கிழிந்ததுண்டையும் வறியோர்கட் கீவதற்கு மனம வாராமல் கந்தைவஸ்திரத்தையுந்தந்து பாத்திரம் வாங்குகிறார்கள். (இது என அன்பிற்குரியவொருவா வாங்கவுங்கண்டேன்.) பசுவுக்காக அன்னப் பாலையும் (கஞ்சி)தருவது கிடையாது ; பசுவையுடையோர் கஞ்சியைக் கேட்டாலும் சாணம் தந்தால்தான் தருவோம்; சாணம் தருகின்றீர்களா ? என்று கேட்கிறார்கள். இவர்களை நோக்கித்தானோ மாதாநு பங்கிய

> ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற்
> கிரவி னிளி வந்ததில்

என்றனா.

மெய்யன்பர்களே ! தர்மத்தின்பா லொழுகாததினாலல்லவோ பிறமதஸ்தர்களும் ஒப்புயர்வில்லாச் செப்பரும் நம் சைவமதத்தை எளனமாகக் கருதி தூடணைசெய்கிறார்கள். சைவசமயத்தூடணஞ் செய்தால் நம்மை வலிந்தாட்கொள்ளும் தயாநிதியாகிய அறுமீன் காதலனை நிந்தித்ததுபோலல்லவோ ? உலகத்தில் பெண்களுக்கு மாங்கல்யதாரணம் செய்தவன் நாயகன்; புருஷர்களாகிய நமக்கு நாயகன் வாகுலேயன். நம் கணவனுக்கு நிந்தையைத் தேடிவைக்

கின்றோம். நம்பதியை நிந்திக்கும்பொழுது செவிசாய்க்கின்றோம். அதர்மம் என்ற வாளைக்கொண்டு தர்மஸ்வரூபியாகிய நம்பதியை வெட்டுகின்றோம்! ஆ! இதுவா நமது கற்பு? நம சைவசமயத்திற்கு நிந்தையைத் தேடலாமா? தூஷிக்கும்பொழுது நாம செவி சாய்க்கலாமா? நாம் தர்மத்தினவழி நடக்காததினாலல்லவோ செவி சாய்க்க நேரிடுகிறது; ஆகவே தர்மவழியாகவே நடக்கவேண்டும், தானஞ்செய்யவேண்டும்; தானஞ் செய்யாமல் சாப்பிடப்படாது. தானஞ்செய்யாமல் தின்கிறவன் விஷத்தையுண்டவனாகிறான்!

."அஸ்நாதா சீமலம் புங்தே ஹ்யஜப: பூயசோணிதம்
அஹுத்வாச் க்ருமீந் புங்க்தே ஹ்யதத்வா விஷமச்நுதே"

—அத்திரி.

(இ-ள்)—ஸ்நானஞ் செய்யாமல் சாப்பிடுகிறவன மலத்தைத் தினகின்றவனாகின்றான்! ஜபஞ்செய்யாமல் புசித்தவன் இரத்தம் சீழ் புசித்தவனாகின்றான்! ஓமம செய்யாமல் புசித்தவன புழுக்களை யுட்கொண்டவனாகின்றான்! தானஞ்செய்யாமல் புசித்தவன் விஷத்தையுண்டவனாகிறான்' என்று அத்திரி கூறுகின்றார் ஆகவே ஏழைகளுக்கு உதவிசெய்யவேணடும்; "அஹிம்ஸா பரமோ தர்ம:" ஹிம்சை-எனறால் தொந்தரவு, அஹிம்சை என்றால் தொந்தரவு இல்லாமை; ஆகவே பிறவுயிர்களுக்கு துன்பத்தைச் செய்யாமல் இருப்பதுவே சிறந்த தர்மம். அஹிம்ஸையே சிறந்த தர்மமாக நினைக்கும் ஜெயினர்கள் தேன் சாப்பிடுவது கிடையாதாம; ஏனெனில் தேனீயானது புஷ்பிக்கும காலங்களில் சிறிதேனும் சோம்பலில்லாமலும் சிரமம் பாராமலும் புஷ்பந்தோறுஞ்சென்று அலைந்தலைந்து தேனைத் துளித்துளியாகச் சேர்த்து புஷ்பமில்லாத காலத்தில் தங்களுடைய ஆகாரத்திற்காக வைத்திருக்கிறது. அந்தத்தேனை மனுஷ்யன் சாப்பிடுவதாயிருந்தால் ஆயிரக்கணக்கான தேனீக்களைக்கொன்று தேனைக் கொள்ளையடித்துதான் சாப்பிடவேண்டும். ஆகவே, தேன் சாப்பிடப்படாதென்பது ஜெயினர்களுடைய கொள்கையாம். ஜெயினமதக்கிரந்தமாகிய "உதாஜ ஜைனம்" என்னும கிரந்தத்தில் "ஒரு துளிதேன் சாப்பிட்டவன் ஏழுகிராமங்களை எரித்து சாம்பலாக்கினவனுக்குச் சமமான பாபியாகிறான்" என்று கூறப்பட்டிருக்கிறது. ஆகவே அஹிம்ஸை என்ற தர்மத்தை ஒவ்வொருவரும் கைக்கொள்ள வேண்டும். சொற்சுத்தம், மனச்சுத்தம் என்னும் இரண்டு தர்மங்களே மேலான தர்மம் "ஸத்யாந நாஸ்தி பரோ தர்ம:" ஸத்யத்தை

விட மேலான தர்மம் இல்லை என்று பெரியோர்கள் கூறுகிறார்கள். பிரம தர்மத்தில் ' ஸத்யத்தைவிட்டு வழுவலாகாது, தாமத்தைவிட்டு வழுவலாகாது, நற்செய்கையைவிட்டு வழுவலாகாது

ஸத்யாந் நப்ர மதி தவ்யம் தர்மாந் நப்ர மதிதவ்யம்
குசலாந் நப்ர மதி தவ்யம்

என்று கூறுகிறது சொக்காப்போதரும வாய்மை என்ற அதிகாரத்தில

பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று ! என்றனா.

ஆதலினால் சொறசுத்தமிருப்பதுதான் சிறந்த தருமமாகும். நாம் தர்ம வழியில் நடந்தால்தான துயர்கூர் பிறவியினின்று உயவோம். பிரபுலிங்கலீலையில்

எய்தற் கரிய யாக்கைதனக் கெய்திற் றென்ற லதுகொண்டு
செய்தற் கரிய வறங்கள்பல செய்து துயர்கூர் பிறவியினின் [றில்
றுய்தற் கொருமை பெறவெண்ணா துழல்வோ னுடம்பு பொற்கலத்
பெய்தற் கரிய பால்கமரிற் பெய்த தொக்கு மென்பரால்

என்பதுபோல் மானிடசரீரம எடுத்ததின்பயன் அறமார்க்கத்திலேயே ஒழுகல்வேண்டும ஏனெனில் மனுஷ்ய சரீரம ஒரு நாளைக்கு அழிந்துபோய்விடும். ஆகவே மானிடசரீரம் இருக்கும்பொழுது தர்மத்தின்பால் நின்று ஆன்மலாபத்தை யடைந்தேதீரவேண்டும.

தவத்துறை மாக்கள் மிகப்பெருஞ் செல்வர்
ஈற்றிளம் பெண்டி ராற்றப் பாலகர்
முதியோ ரென்னு திளையோ ரென்னுன்
கொடுந் தொழிலாளன் கொன்றனன் குவிப்பவிவ்
வழல்வாய் சுடலை தின்னக் கண்டுங்
கழிபெருஞ் செல்வக் கள்ளாட் டயர்ந்து
மிக்க நல்லறம் விரும்பாது வாழும்
மக்களிற் சிறந்த மடவா ருண்டோ
இளமையு நில்லா யாக்கையு நில்லா
புத்தே ளுலகம் புதல்வருந் தாரார்
மிக்க வறமே விழுத்துணை யாவது.

—மணிமேகலை.

உ

ஓம் தத் ஸத்:

இரவல்

“ இரவல் ” என்பது யாவருக்கும் இன்றியமையாததென்பது பெரும்பாலோர் அபிப்பிராயம்; ஆயினும், சுயமரியாதையுள்ள ஒவ்வொருவனும், இழிவான இவ்விரவலை மேற்கொள்ளான். இரப்பதைப்பற்றி

பல்லெலாம் தெரியக் காட்டி பருவரல் முகத்திற் கூட்டிச்
சொல்லெலாம் சொல்லி நாட்டித் துணைக்கரம் விரித்து நீட்டி
மல்லலா மகல வோட்டி மானமென் பதனை வீட்டி
இல்லலா மிரத்த லந்தோ இழிவு, இழிவு

என்று பெரியோர் கூறியிருக்கின்றார். இதனாலறான் இரவல் கேட்கும் பெரியோர்கள், பல்லெல்லாம் காட்டி மாயா இழிப்புடன் உடனேயோ, அடுத்த நிமிஷத்திலேயோ, தாம் பெற்றுப்போகும் சாமான்களைக் கொடுத்துவிடுவதாகச் சொல்லி வாங்கிப்போய், அவர்கள் சௌகரியப்படி உபயோகித்துக்கொண்டு திருப்பிக் கொடுப்பதை வழக்கமாய் வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். இதைக் கௌரவமான பிச்சை என்றுதான் சொல்லவேண்டும். இரவல்! இரவல்!! அப்பா!!! இதில எத்தனைவிதம்? வருஷக்கணக்கில் வர்ணித்தாலும் இது ஒரு முடிவிற்கு வராது என்று நிச்சயமாகச்சொல்லலாம். இக்கொடியவியாதியால் கணக்கற்ற புத்தகங்களும், பத்திரிகைகளும் சாமான்களும் மாள்கின்றன. இந் நோயைத்தீர்க்க ஒரு L. M. P. யும் ஏற்படாதது விந்தையே.

நாம் ஒரு புத்தகத்தையோ அல்லது பத்திரிக்கையையோ அல்லது பேப்பரையோ வாசித்துக்கொண்டிருக்கும்போது நமக்குத் தெரிந்த ஒருவர் வந்து சம்புவைப்போல்பேசி, பத்து நிமிஷங்களில் கொடுத்துவிடுவதாக வாங்கிக்கொண்டு போய்விடுகின்றனர். நமது புத்தகம் உருமாறி மூலைகளில் மடிக்கப்பட்டு “ நாய்க்காது” களுடன் நம்மிடம் திரும்பிவருவதுமுண்டு; நம்புத்தகம் ஆரோக்கியத்துடன் இருக்கும்பொருட்டு, அப்பியங்கஸ்நானஞ் செய்துவைத்து அனுப்புமற்றொருவிதம்; இன்னுஞ்சிலர் “ அயேஸ் ” சங்கத்தின் அங்கத்தி

னர்கள் நம் கண்களுக்குக்காட்டாமலே வாயில் போட்டுக்கொள்வது இன்னொருவிதம்; சிலர் (நம புத்தகம) இரவல்கொடுத்து நம் புத்தகத்திலுள்ள படங்களையும் இனியவிஷயங்களையும அபேஸ் செய்துவிட்டு மிகவும் பத்திரமாய அனுப்புவது இன்னொருவிதம இம்மாதிரி வருடமெல்லாம் இரவல் வாங்கிபபடித்துக்கொண்டிருக்கும தனவானகள் காசுபோட்டு வாங்கிப் படிப்பதுதான் எப்பொழுது?

உடைகளை இரவல் கேட்பது ஒரு புதிதன்று; நமது நண்பர் நான் நாளை காலை 3-30-க்கு புகைவண்டிக்கு மதராஸ் போகிறேனென்றாவது அல்லது மாமியார் வீட்டுக்குப போகிறேனென்றாவது சொல்லிவிட்டு நமது உடுப்புகளைப பெறறுப்போகிறார்கள்; இவர்கள் இவற்றைத் திருப்பிக்கொடுப்பது துர்லபமே. அப்படித் திருப்பிக்கொடுத்தாலும ஏதாவது ஒன்றில்லாயினும் ஒரு எக்ஸ்பெரிமெண்டல் போஸ்ட் ஆபீஸாவது அல்லது கடவுளாலும அழிக்கமுடியாத சில முத்திரைகளாவது இல்லாமல போகாது.

பேறு இரவல் கேட்பது ஒரு ஆச்சரியமானதென்று நினைப்பது கூடாது; தபாலாபீஸுக்கு அருகில நம் பேறுவைக் காட்டிவிட்டால் கடிதம் எழுதவேண்டுமென்றும் மணியார்டர் எழுதவேண்டுமென்றும் நம் பிராணனை வாங்கிவிடுவார்கள், ஐயா நான் அவசரமாக புகைவண்டித்தொடர் நிற்குமிடத்திற்குப் போகவேண்டும் என்று கூறினால் நீங்களாவது எழுதிக்கொடுத்துவிடுங்கள் என நம்மிடம் வேலை வாங்கிக்கொண்டு சுமார் ஒருமணி நேரம் தாமதித்து அனுப்பிவிடுவார்கள். பேறுவை அவர்களிடம் கொடுத்துவிட்டாலோ மண்வெட்டி பிடித்த தங்களுடைய கையால் தாங்கள் இஷ்டப்படி எழுதியபிறகு நாம எழுதமுடியாதபடி திருப்பிக்கொடுத்துவிடுவார்கள். அதிகாரிகளின் முன் காட்டிவிட்டாலோ விசிட் எழுதிவிட்டுத் தருகிறேன் என்று வாங்கி எழுதியபிறகு இது என்ன பேறு? கூர்மையாக நன்றாய் எழுதுகிறதே என்று பேறுவின் பெயரைப் பார்த்துவிட்டு (the Krishna) தங்களுடைய கோட் பையில் போட்டுக்கொண்டு போய் விடுவாரகள். நாம் பேறுவைக் கொடுங்களென்று கேட்க முடியாமல் வடையை இழந்த காக்கையைப்போல் பார்த்துக்கொண்டிருக்க வேண்டியதுதான். இம்மாதிரி பேட் புத்தகம் முதலானவைகளையும் வாங்கிக் கொண்டுபோய்விடுவார்கள். இவைகளுக்குப் புது மாதிரியான இரவல் ராஜதிருடு எனப் பெயரிடலாமே.

(தொடரும்)